In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

| | |
|---|---|
| S.C.No. 78/2023 | Prosecution witness P.W.8 |
| Name: Thangapandi | Calling: |
| Father Name: | Religion: |
| Village: | Caste: |
| Taluk: | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 03.03.2026.

முதல் விசாரணை :-

நான் தற்போது விராலிமாயன்பட்டியில் வசிக்கிறேன். விவசாயம் செய்கிறேன். நான் தோட்டத்திற்கு விவசாய வேலைக்காக சென்றேன். அங்கு ஆய்வாளர் நின்றிருந்தார். கையெழுத்து மட்டும் போடச்சொல்லி கேட்டதற்கிணங்க நான் கையெழுத்து போட்டேன். என்னிடம் காண்பிக்கப்படும் மகசரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. அந்த கையெழுத்து அதசாஆ.3. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பகுதியாக பிறழ் சாட்சியாக மாற்ற அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்)

குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்)

போலீசார் என்னை விசாரித்தாகவும், கடந்த 26.06.2022ம் தேதி 17.00 மணிக்கு நானும் எங்கள் ஊரைச்சேர்ந்த சின்னமணி மகன் அலெக்ஸ்பாண்டியும் எங்கள் ஊர் நாடகமேடை அருகே இருந்தபோது விளாம்பட்டி காவல் ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்துள்ளார் என்றும் பார்வை மகசரில் நானும் அலெக்ஸ்பாண்டியும் கையெழுத்து செய்தோம் என்று சொல்லியுள்ளேன் என்று

சொன்னால் சரியல்ல. தற்போது  எதிரிகளை இந்த வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மையை மறைத்து பொய்சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை   இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2026.03.03 13:40:00 +0530

Principal District Judge,
Dindigul.